முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

# 48 - தமிழ் இலக்கிய நயம்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

kalvi.lk

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 48 - தமிழ் இலக்கிய நயம்

## புள்ளி வழங்கும் திட்டம்

| | | |
|---|---|---|
| பகுதி I | 1 ஆம் வினா | 04x05 = 20 புள்ளிகள் |
| | 2 ஆம் வினா | 05x05 = 25 புள்ளிகள் |
| பகுதி II | 3ஆம் வினா | 05x05 = 25 புள்ளிகள் |

பகுதி III ( எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும்)

4ஆம் வினா 15 புள்ளிகள்

5ஆம் வினா 15 புள்ளிகள்

6ஆம் வினா 15 புள்ளிகள்

7ஆம் வினா 15 புள்ளிகள்

} 15 x 02 = 30 புள்ளிகள்

**மொத்தம் 100 புள்ளிகள்**

Education கல்வி அධ්‍යාපන

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2022 (2023)

### விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர்கள் ஊதா நிறக் குமிழ் முனை பேனாவினை விடைத்தாள்களை புள்ளியிடுவதற்குப் பயன்படுத்தவும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரீட்சகரினால் புள்ளிகள் பிழையற்றது என உறுதிப்படுத்த நீலநிற அல்லது கருப்புநிறப் பேனாவினை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..........................................................................................
..........................................................................................
..........................................................................................

(ii) ..........................................................................................
..........................................................................................
..........................................................................................

(iii) ..........................................................................................
..........................................................................................
..........................................................................................

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 03 | (i) | $\frac{4}{5}$ | (ii) | $\frac{3}{5}$ | (iii) | $\frac{3}{5}$ | $\frac{10}{15}$ |

**பல்தேர்வு விடைத்தாள்**

01 **துளைத்தாள் தயாரித்தல்**

i. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.
ii. அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.
iii. துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.
iv. சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.
v. **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**


kalvi.lk

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை x அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிட்டு பிழையிடவும் புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் ஒவ்வொரு விடைக்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளின் தொகையினை ஒவ்வொரு பக்கமாக கூட்டவும் அக்கூட்டுத்தொகை உங்களால் முன்பக்கத்தில் மொத்தம் எனக் குறிப்பிட்ட மொத்தப்புள்ளிகளுக்கு சமமானதா? என பரீட்சிக்கவும்

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

i. ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.
ii. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.
iii. வினாப்பத்திரம் I இற்கான புள்ளிப்பட்டியலில் "Total Marks" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**
iv. வினாப்பத்திரம் II இற்கான புள்ளி பட்டியலிலை தயார் செய்யும் போது பகுதிப்புள்ளிகளை பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப்புள்ளியை புள்ளிப்பட்டியலின் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.
v. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**
vi. 21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப் புள்ளிகளை உள்ளடக்கி அவ்வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**

i. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது **முழுத்தானத்தில்** வினாப்பத்திரம் I, II மற்றும் III என்ற புள்ளி பட்டியலின் உரிய நிரலில் நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது **தசம தானங்களில் அல்லது பின்னத்தில் பதியப்படலாகாது.**
ii. புள்ளி பட்டியலில் சகல பக்கங்களிலும் புள்ளிகளை பதிந்த உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்பார்த்த உதவி பரீட்சகர், புள்ளிகளை பரீட்சிக்கும் எண்கணித பரீட்சகர் (EMF) மற்றும் பிரதம பரீட்சகர் ஆகியோர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.


kalvi.lk

## நோக்கங்கள்

1. பரீட்சார்த்தி இலக்கியங்களைக் கற்று, அவை குறித்த கருத்துக்களை வெளிப்படுத்தும் திறனை மதிப்பிடுதல்.
2. இலக்கியங்களைக் கற்று, அதன்வழி வெளிப்படும் பரீட்சார்த்தியின் மொழியாற்றலைக் கணிப்பிடல்.
3 பல்வேறுபட்ட படைப்புக்களை வாசித்துக் கிரகிக்கும் ஆற்றலை மதிப்பிடல்.
4. பல்வேறுபட்ட படைப்புக்களை வாசித்து அவற்றை நயக்கும் ஆற்றலை மதிப்பிடல்.

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# 48 - தமிழ் இலக்கிய நயம்

## பகுதி - I

1. (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) "மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன்"

(அ) மேற்படி திருக்குறளின் பொருளைத் தெளிவாக எழுதுக.

**வானத்து நட்சத்திரங்கள், நிலவையும் தலைவியின் முகத்தினையும் கண்டு இதுதான் நிலவு, இதுதான் தலைவியின் முகம் என அறிந்துகொள்ள முடியாது மயங்கித் திரிகின்றன.**

(ஆ) இங்கு, தலைவியின் அழகு எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

**– நட்சத்திரங்கள் தலைவியின் முகத்திற்கும் நிலவிற்கும் வேறுபாடு காண முடியாது (ஓரிடத்தில் நிற்காது) கலங்கித் திரிகின்றன என்பதன்மூலம் தலைவியின் முகம் நிலவுபோல விளங்கும் தன்மை எடுத்துரைக்கப்படுகிறது.**

**(04 புள்ளிகள்)**

(ii) "..................... பிள்ளைமீன்
புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி
உள்ளரிக்கச் சோர்ந்தாள் உயிர்"

(அ) 'பிள்ளைமீன் புள்ளரிக்கும் நாடன்' யார்? அவனது திருமடந்தை யார்?

**– வீமராஜன்**
**– தமயந்தி**

(ஆ) காதல் காரணமாக அத்திருமடந்தை வாடியமை இங்கு எவ்வாறு விவரிக்கப்படுகின்றது?

**மன்மதனின் மலரம்புகள் தமயந்தியின் உள்ளத்தைத் தாக்கியதால் அவள் உயிர் சோர்ந்தாள் என்று கூறுவதன் மூலம்**

**(04 புள்ளிகள்)**



kalvi.lk

(iii) "வயிற்றில் குடியிருந்து
வாழ்ந்து பசிக்கிறது
நிகழ்காலம்.
பசியில் அடைத்த
காதிலும் விழுகிறது
'நாளை புரட்சி
சரித்திரம் நமது கட்சி'
என்று என்
பசியைக்கூட
ஜீரணிக்க முயற்சிக்கும்
ஏப்பக் குரல்கள்.
ஆனால்,
நாளைகள் ஒவ்வொன்றும்
நாள்தோறும் நேற்றாக
தன்பாட்டில் போகிறது
தான்தோன்றிச் சரித்திரம்."

(அ) இக்கவிதை எடுத்துரைக்க முற்படும் விடயம் யாது?

**எவ்வளவுதான் போராடினாலும் உழைக்கும் வர்க்கத்தின் வறுமைநிலை மாற்றமின்றித் தொடர்கிறது.**

(ஆ) 'நாளை ஒவ்வொன்றும் நாள்தோறும் நேற்றாக தன்பாட்டில் போகிறது' என்ற கூற்றின்மூலம் உணர்த்தப்படுவது யாது?

**முன்னேற்றம் / மாற்றம் எதுவும் இல்லாமை**

**(04 புள்ளிகள்)**

(iv) "காயங்கள் விரைவில் காய்ந்துவிடுவதில்லை. அவற்றை மூடுவதற்காகச் சிரிப்புச் செய்து அணிந்துகொண்டேன்."

(அ) இங்கு காயங்கள் எனப்படுபவை யாவை?

**சமூகத்தின் நடவடிக்கைகளால் மனதில் ஏற்படும் துயரங்கள்**

(ஆ) 'சிரிப்புச் செய்து அணிந்துகொண்டேன்' என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது?

**போலியான சிரிப்பின்மூலம் தன் மனநிலையை மறைத்தல்**

**(04 புள்ளிகள்)**

(v) "எனக்கு இந்த மலர்களைக் கொண்டு மாலைதான் தொடுக்கத் தெரியும். ஆனால் சொற்களைக் கொண்டு சரம் தொடுக்கத் தெரிந்த வித்தகி அவள்."

(அ) இக் கூற்றில் யாருடைய பெருமை, யாரால் எடுத்துரைக்கப்படுகின்றது?

**– மாதவியின் பெருமை**

**– கண்ணகியால்**



kalvi.lk

(ஆ) 'சரம்' என்ற உருவகம் எதனைக் குறிக்கின்றது? அதன் பொருத்தப்பாட்டை விளக்குக.

**- கவிதை**

**- பூக்களைக் கொண்டு மாலை தொடுப்பதைப் போல, சொற்களைக் கொண்டு கவிதை புனைதல்**

**(04 புள்ளிகள்)**

[ 4 x 5 = 20 **புள்ளிகள்**]

**2.** கீழ்க்காணும் உரைப்பகுதியை அல்லது செய்யுட்பகுதியை வாசித்து, தரப்பெற்ற வினாக்களுக்கு விடை எழுதுக.

மண் மனிதனுக்குப் புதைகுழி; மரத்துக்கோ கருவறை.

மனிதன் தன்னை மண்ணின் மைந்தன் என்று வெட்கமில்லாமல் சொல்லிக்கொள்கிறான். உண்மையில் மண்ணின் மைந்தர்கள் மரங்களே; மனிதர்கள் அல்லர்.

பிறந்த இடத்தில் பற்று வைத்து வரவு வைப்பவை மரங்கள். மனிதன் பிறந்த இடத்தைச் செலவு செய்கிறவன்.

மரங்கள் சாய்ந்தால் காட்டிலிருந்து வீட்டுக்கு வரும். மனிதன் சாய்ந்தால் வீட்டிலிருந்து காட்டுக்குப் போகிறான்.

மரம் புழுதியில் பூக்களையும், கழிநீரில் கனிகளையும் செய்கிறது. மனிதன் பூக்களில் புழுதியையும், கனிகளில் கழிநீரையும் செய்கிறான்.

மனிதர்களுக்கு ஒரே ஒரு சிபி; ஒரே ஒரு சீதக்காதி. மரங்களில் எல்லாமே சிபிகள்; எல்லாமே சீதக்காதிகள்.

மரம் கொடுப்பதற்காகவே கைகளை நீட்டுகிறது. மனிதன் வாங்குவதற்காகக் கைகளை நீட்டுகிறான்.

மரம் அத்தனை கைகளாலும் கொடுக்கிறது; மனிதன் வலக்கையால் கொடுப்பதை இடக்கையால் வாங்கிக் கொள்கிறான்.

மரம் வானத்தை நோக்கியே வளர்கிறது; மனிதன் புழுதியிலேயே புரளுகிறான்.

மரமாகத்தான் முடியவில்லை; மரங்களைப் படைக்கவாவது மனிதனுக்குத் தெரிகிறதா?

இதோ! அவன் படைத்த மரங்கள்: தூக்கு மரங்கள், சிலுவை மரங்கள், கழு மரங்கள், கொடி மரங்கள். அத்தனையும் மாமிசப் பட்சணி மரங்கள்; மலர்களைத் தின்று முட்களை உற்பத்தி செய்யும் மரங்கள்; வெயிலை விநியோகிக்கும் மரங்கள்.

இந்த அழகில் மனிதன் உயர்திணையாம்; மரம் அஃறிணையாம். சரிதானா?



kalvi.lk

(i) மரத்தையும் மனிதனையும் மண்ணோடு தொடர்புபடுத்திக் கூறும் விடயங்களில் மரத்தின் இயல்புகள் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன?

- மரங்கள் மண்ணிலிருந்து உருவாகின்றன என்பது கூறப்படுதல்
  'மண் மரத்துக்கோ கருவறை'
  'மண்ணின் மைந்தர்கள் மரங்களே'
- மண்ணைப் பற்றிக்கொண்டு வளர்தல் மண்ணிலே பாசம்வைத்தல் எனக் கூறப்படுதல்
- மண்ணுக்கு, மக்களுக்கு வளம் தருதல்

**(04 புள்ளிகள்)**

(ii) கொடை கொடுக்கும் விடயத்தில் மனிதனை விட மரங்கள் மேம்பட்டன, என்ற கருத்து எவ்வாறு வலியுறுத்தப்படுகின்றது?

- மனிதர்களில் ஒரு சிலரே கொடைவள்ளல்கள்; மரங்கள் யாவும் கொடை வள்ளல்கள்.
- மரங்கள் கொடுப்பதற்காகவே கைகளை நீட்டுதல்; மனிதன் வாங்குவதற்காகவே கைகளை நீட்டுதல்.
- மரங்கள் அத்தனை கைகளாலும் கொடுத்தல்; மனிதன் வலக்கையால் கொடுப்பதை இடக்கையால் வாங்கிக்கொள்ளுதல்.

**(04 புள்ளிகள்)**

(iii) மனிதன் படைத்த மரங்கள் எவ்வாறு இழித்துரைக்கப்படுகின்றன? அவ்வாறு இழித்துரைப்பதன் பொருத்தப்பாடு யாது?

- மாமிசப் பட்சணி மரங்கள், மலர்களைத் தின்று முட்களை உற்பத்தி செய்யும் மரங்கள், வெயிலை விநியோகிக்கும் மரங்கள் எனல்
- உயிர்களை அழித்து, மனிதர்களிடையே பிளவுகளை ஏற்படுத்தித் துன்பத்தைத் தருதல்

**(04 புள்ளிகள்)**

(iv) 'பிறந்த இடத்தில் பற்றுவைத்து வரவு வைப்பவை மரங்கள்.' - இத்தொடரில் ஆசிரியரின் சொல்லாட்சித் திறம் வெளிப்படுமாற்றை விளக்குக.

வணிகத்துறையைச் சார்ந்த பற்று, வரவு ஆகிய சொற்களை மரத்தின் இயல்புகளை விளக்கப் பொருத்தமுறக் கையாளுதல்

**(04 புள்ளிகள்)**

(v) 'மரங்கள் சாய்ந்தால் காட்டிலிருந்து வீட்டுக்கு வரும். மனிதன் சாய்ந்தால் வீட்டிலிருந்து காட்டுக்குப் போகிறான்' - இக்கூற்றை விளக்குக.

- மரங்கள் அழிந்தால் தளபாடம், விறகு எனப் பல வடிவங்களில் வீட்டுக்கு வருதல்
- மனிதன் இறந்தால் இடுகாட்டுக்கு / சுடுகாட்டுக்குப் பிணமாக போதல்

**(04 புள்ளிகள்)**

**[ 04 + 04 + 04 + 04 + 04 = 20 புள்ளிகள்]**

அல்லது

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில், - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்

என்றும் அடிமைச் சிறையினி லேவைத்த
எத்தர்கள் கொட்ட மடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்!

பெண்ணுக்கு கல்வி பெருந்தீது, உரிமை
பேசிடி லோஅது பெருந்தவறு, என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணிற் புதைந்திட
எண்ணற் கரிய கலை படைப்போம்!

சாதிச் சமய சங்கறுத்து, பெண்கள்
தாழ்வுயெனும் தீய போக்கொழித்து; இம்
மேதினி யில்புது மாற்றம் படைத்து பெண்
விடுதலைக் கீதம் இசைத்திடுவோம்!

பெண்ணுக்கு இங்கோர் தனிநீதி - என
பேசிடும் நூல்கள் எவையெனினும் - அவை
மண்ணில் புதைத்து மகிழ்ந்திடுவோம் - நவ
மாதர் அறங்கள் படைத்திடுவோம்!

போலித் தலைமை பொசுக்கிடுவோம் - இவர்
பொய்மைத் திரையைக் கிழித்தெறிவோம்!
பாலித்திடுவோம் புதுயுகத்தை, மலைப்
பாவையர் வாழ்வில் உயர்ந்திடுவோம்!

(i) இக்கவிதையை யாருடைய கூற்றாகக் கவிஞர் அமைத்துள்ளார்? தம்மை அடக்க முனைவோர் மீதான அவர்களின் எதிர்ப்புணர்வு எவ்வெவ்வாறு வெளிப்படுகிறது?

* தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் பெண்களுடைய கூற்றாக

* பின்வரும் கவி வரிகள் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது

- பெண்களை அடிமைச்சிறையிலே வைத்த எத்தர்கள் கொட்டம் அடக்கிடுவோம்
- போலித் தலைமை பொசுக்கிப் பொய்மைத் திரையைக் கிழித்தெறிவோம்
- பெண்ணுக்குக் கல்வி பெருந்தீது, உரிமை பேசிடிலோ பெருந்தவறு என்ற எண்ணம் படைத்தவர் மண்ணில் புதைந்திடச் செய்வோம்

**(04 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

(ii) அவர்கள் தங்கள் நோக்கத்திற் கொண்ட மனவுறுதியும் அவர்களின் தன்னம்பிக்கையும் எவ்வெவ்வாறு புலப்படுகின்றன?

* **மனவுறுதி** : குன்று நிகர்த்த மனவுறுதி

* **தன்னம்பிக்கை**
  - வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென மேலுறும் எண்ணம்
  - மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்

  முதலான கவிவரிகள் மூலமாக

**(04 புள்ளிகள்)**

(iii) அவர்கள் உலகில் ஏற்படுத்த விரும்பும் புதிய மாற்றம் எத்தகையது?

* புத்தம் புதிய கலைகளைப் படைத்தல்
* சாதி, சமய பேதங்களை நீக்கி, பெண்ணடிமைத்தனமாகிய தீய போக்கினை இல்லாது செய்து, அவற்றின் மூலம் உலகில் புதிய மாற்றத்தை ஏற்படுத்துதல்
* நவ மாதர் அறங்கள் படைத்தல் (பெண்களுக்குப் புது நீதி படைத்தல்)
* மலைப்பாவையர் (தோட்டத் தொழிலாளப் பெண்கள்) வாழ்வில் புதுயுகம் படைத்தல்

**(06 புள்ளிகள்)**

(iv) பின்வரும் தொடர்களில் இடம்பெற்றுள்ள அணி யாது? அத்தொடர்களில் காணத்தக்க நயங்கள் யாவை?

- 'வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென மேலுறும் எண்ணம் எங்கள் மனதில்'
- 'குன்று நிகர்த்த மனவுறுதி'

* **உவமையணி**
* நயம்
  - பெண் தொழிலாளர்களின் மனதில் எழும் எண்ணங்களுக்கு(போராட்ட உணர்ச்சிக்கு) வெட்டிய செடியில் புதிதாய்ப் புடைத்தெழும் அரும்பு உவமிக்கப்பட்டுள்ளது.

    தோட்டப் பெண் தொழிலாளர்களின் மனதில் அவர்கள் மீதான அடக்குமுறைகளுக்கு எதிரான உணர்ச்சிகள் பலவாகத் திரண்டெழுவதற்கு தேயிலைச் செடியை வெட்ட வெட்ட புதிய அரும்புகள் பலவாக முளைத்தெழுதல் பொருத்தமுற உவமிக்கப்பட்டுள்ளது.
  - பெண் தொழிலாளர்களின் மனவுறுதிக்கு குன்று உவமிக்கப்பட்டுள்ளது.

    அடக்குமுறைகளுக்கெதிரான போராட்ட எண்ணங்களை இனி யாராலும் தகர்க்க முடியாது என்பது மனவுறுதிக்கு குன்று உவமிக்கப்பட்டுள்ளமையின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**(06 புள்ளிகள்)**

**[ 04 + 04 + 06 + 06 = 20 புள்ளிகள்]**

## வினாத்தாள் II

1. பின்வரும் கவிதையை வாசித்து, அதன் கீழ்த் தரப்பட்டுள்ள தொடர்களின் / வழிகாட்டற் குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்தபட்சம் 200 சொற்களில் எழுதுக.

தாமரை வதனம் சாய்த்து,
தனு நெடுந் தரையின் ஊன்றி
மாமியார் குழுவில் வந்தானாம்
என, மைந்தன் நிற்ப
பூமியில் அணங்கு அனார்தம்
பொதுவிடைப் புகுந்து, பொன்தோள்
தூ மன நெடுங்கண் தாரை,
நடுங்குவாள், இனைய சொன்னாள்.

“அந்தம்இல் காலம் நோற்ற
ஆற்றல் உண்டாயின் அன்றி,
இந்திரன் முதலினோர்க்கும்
எய்தலாம் இயல்பிற்றாமோ?
மைந்த! நின் பாதம்கொண்டு,
எம் மனை வரப்பெற்று வாழ்ந்தேம்;
உயந்தனம்; வினையும் தீர்ந்தேம்;
உறுதி வேறு இதனின் உண்டோ?”

“வெய்தின் நீ வருதல் நோக்கி வெருவி நின் சேனைவீரர்
செய்திதான் உணர்கிலாது, ‘திருஉளம் தெரித்தி’ என்றார்;
ஐய! நீ ஆழி வேந்தன் அடியிணை பிரிகிலாதாய்,
எய்தியது என்னை?” என்றாள், இசையினும் இனிய சொல்லாள்.

“ஆர்கொலோ உரைசெய்தார்?”
என்று அருள்வர, சீற்றம் அஃக
பார்குலாம் முழு வெண் திங்கள்,
பகல்வந்த படிவம் போலும்,
ஏர்குலாம் முகத்தினாளை,
இறைமுகம் எடுத்து நோக்கி,
தார்குலாம் அலங்கல் மார்பன்,
தாயரை நினைந்து நைந்தான்.

மங்கல அணியை நீக்கி, மணிஅணி துறந்து, வாசக்
கொங்குஅலர்கோதை மாற்றி, குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்கு வெம்முலைகள், பூகக்கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல், நயனங்கள் பனிப்ப நின்றான்.

(அ) கம்பராமாயண காவியப் போக்கில் கிட்கிந்தைப் படலத்தின் இடம்

* சீதையைக் காணாது தேடி கிஷ்க்கிந்தையை நோக்கிவரும் இராமனுக்கு அனுமன்மூலம் சுக்ரீவனின் நட்புக் கிடைக்கிறது. வாலியால் தன் ஆட்சியையும் மனைவியையும் இழந்திருந்த சுக்ரீவனுக்கு, வாலியைக் கொன்று அவற்றை மீட்டுத்தருகிறான் இராமன். இராமனுக்குத் தான் கொடுத்த வாக்கின்படி கார்காலம் முடிந்ததும் சீதையைத் தேடியுதவ சுக்ரீவன் முனையவில்லை. நன்றி மறந்து புதுவாழ்வில் சுகிக்கும் சுக்ரீவனில் கோபம் கொண்டு இலக்குவனை அனுப்பி நிலைமையை அறிந்து வருமாறு இராமன் கூறுகிறான்.

**(06 புள்ளிகள்)**

(ஆ) தாரையின் தோற்றப் பொலிவு

* அழகிய தோள்களும் நீண்ட கண்களும்
* வெண்மையான முழுநிலவு பகற்பொழுதில் ஒளி குறைந்து காணப்படுவது போல் கணவனை இழந்த சோகத்தோடு விளங்கும் முகம்
* திருமாங்கல்யம், மலர் மாலைகள், பிற ஆபரணங்கள் குங்குமம், சந்தனக் குழம்பு எதுவும் இல்லாத கைம்மை நோன்புக் கோலம்
* கமுகமரம் போன்ற கழுத்தோடு சேர்த்து மார்பும் மறையும் படியாக மேலாடையால் போர்த்து மூடிய தோற்றம்

**(06 புள்ளிகள்)**

(இ) தாரையின் பேச்சுத் திறம்

- இலக்குவனை 'மைந்த' என விளித்தல்
- அளவில்லாத காலம் தவம் செய்தால் மட்டுமே இலக்குவனின் வருகை தேவர்களுக்கே வாய்க்கும் எனல்
- இலக்குவனின் பாதங்கள் எம் இருப்பிடத்தில் பட்டதால் இனிது வாழப்பெற்றோம்; துன்பம் அகன்று நற்கதி பெற்றவர்களானோம் எனல்
- இராமபிரானை எப்பொழுதும் பிரியாமல் வாழ்பவன் எனச் சாதுரியமாகக் கூறல்
- வானரர்கள் அச்சம் கொண்டுள்ளனர் எனக் கூறல்
- சுக்கிரீவனது சேனையை 'நின் சேனை வீரர்' என இலக்குவனிடம் கூறல்

* இவற்றை இனிய சொற்களால் தாரை கூறுதல்
(இலக்குவனின் வருகையின் சிறப்பை, வீரத்தைப் புகழ்ந்து கூறுவதன் வாயிலாக இலக்குவனின் கோபத்தைத் தணிக்க முற்படுதல்)

**(06 புள்ளிகள்)**



kalvi.lk

(ஈ) இலக்குவனின் பண்பு நலம்

- பெண்களைப் பார்க்க நாணப்படுகின்ற நற்குணமுடையவனாக விளங்குதல்
- தாரையின் இனிய, பணிவான வார்த்தைகளைக் கேட்டு கோபம் நீங்கி, அருள் பிறத்தல்
- விதவைக் கோலத்தில் இருக்கும் தாரையைக் கண்டதும் தன் தாயாரை எண்ணி மனமிரங்கிக் கலங்குதல்
- ஒருபோதும் இராமனை விட்டுப்பிரியாத சகோதர பாசம் உடையவனாக விளங்குதல்

**(06 புள்ளிகள்)**

(உ) அணிகளைப் பிரயோகிப்பதில் வெளிப்படும் கம்பனின் கவித்துவம்

- தாமரை வதனம்
- மாமியர் குழுவில் வந்தானாம்
  என, மைந்தன் நிற்ப
- பூமியில் அணங்கு அனார்
- இசையினும் இனிய சொல்லாள்
- பார்குலாம் முழுவெண் திங்கள்,
  பகல் வந்த படிவம் போலும்
- பூசக் கழுத்து

**(06 புள்ளிகள்)**

**[ 05 x 06 = 30 புள்ளிகள்]**

**2.** கானல் வரி என்ற பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(i) காவிரியின் வளம்

* மதகினூடு பாய்ந்து செல்வதால் உண்டாக்கும் ஓசையும் கரைகளையும் வரப்புக்களையும் உடைத்துப் பாய்கின்றதால் உண்டாகும் ஓசையும் புதுப்புனல் விழாக் கொண்டாடும் மக்களின் பலவகை ஓசையும் இருபுறமும் சிறந்து ஒலிக்க நடந்து செல்லும் தன்மை உடையது (சிறந்த நீர்ப்பெருக்கினை உடையது).
* புதுப்புனல் பெருகி வந்தது கண்டு உழவர் மகிழ்ச்சியினால் ஆர்ப்பரிக்கும் ஓசை உடையது (உழவர்களின் மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கு ஆதாரமாக அமைவது).
* இருபுறமும் வண்டுகள் நெருங்கி ஒலிக்கும்படியாக பூக்களாகிய அழகிய ஆடையைப் போர்த்து நடந்து செல்வது (நீர்வளத்தால் இரு கரைகளிலும் வளர்ந்தோங்கிய மரங்களை / சோலைகளை உடையது).
* கரிய கயல்மீன்களாகிய கண்களை விழித்து நளினமாக அசைந்து நடக்கும் தன்மை கொண்டது (மீன்கள் நிறைந்தது).
* பூக்கள் மிகுந்த சோலையில் மயில்கள் மகிழ்ந்து ஆடவும் குயில்கள் விரும்பி இசை பாடவும் விரும்பத்தக்க மாலைகள் அருகே அசையவும் நடக்கும் பெருமைக்குரியது (இரு கரையிலும் உள்ள சோலைகளில் வாழும் விலங்குகளுக்கு ஆதாரமாக இருப்பது).
* சோழ வள நாட்டினைக் குழந்தையாகக் கொண்டு உலகம் உள்ள அளவும் ஓய்வு ஒழிவு இன்றி அதனை வளர்க்கும் தாயாக விளங்குவது (சோழ நாட்டின் வாழ்வுக்கு, செழிப்புக்குக் காரணமாக அமைவது).

**(08 புள்ளிகள்)**


kalvi.lk

(ii) கையாளப்பட்டுள்ள உருவகங்கள்

* காவிரி பாயும் சோழநாட்டுக்குத் தலைவனான வளவனது உரிமை மனைவியாக காவிரி நதி உருவகிக்கப்படுதல்
* சோழ மன்னன் கங்கை நதி பாயும் தேசத்தைக் கைப்பற்றியமை, கங்கையாகிய புதியதொரு பெண்ணைக் கரம்பற்றியதாக உருவகிக்கப்படுதல்
* கன்னியாகுமரி அமையப்பெற்ற பாண்டிய நாட்டின் தென்கோடியையும் கைப்பற்றியமை கன்னியாகுமரி ஆகிய பெண்ணைக் கரம்பற்றியதாக உருவகிக்கப்படுதல்
* காவிரி நதியில் உள்ள கயல்மீன்கள் காவிரியாகிய பெண்ணின் கண்களாக உருவகிக்கப்படுதல் (கயற்கண்ணாய்)
* சோழ நாட்டை மகவாகவும் காவேரியை தாயாகவும் உருவகித்தல்.
* காவேரியின் மேல் பரந்திருக்கும் பூக்களை ஆடையாக உருவகித்தல்.

**(07 புள்ளிகள்)**

**[ 08 + 07 = 15 புள்ளிகள்]**

3. சமுதாயத்திலே பெண்கள் நிலையை,

(i) தூர்

* பெண்கள் நிலை : சமுதாயத்தில் பெண்கள் கருத்துத் தெரிவிக்கச் சுதந்திரம் இல்லாத நிலை
* இந்நிலை மேற்படி கவிதையில் வெளிப்படுமாறு :
  - கிணற்றில் தவறி விழுந்துவிட்ட பொருட்களையும் சேறு, பாசி முதலியவற்றையும் எடுத்து, கிணற்றைத் துப்புரவு செய்தலே தூர் எடுத்தலாகும்.
  - சாதாரணமாக வீட்டுக் கிணற்றில் தூர் எடுக்கும் செயற்பாட்டை விபரித்து, அதனூடு சமுதாயத்தில் பெண்ணின் நிலையைப் புலப்படுத்துதல்.
  - இன்றுவரை அம்மா கதவுகளின் பின்னிருந்துதான் அப்பாவோடு பேசுகிறாள் என்பதன் மூலம், பெண்ணின் கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படும் நிலைமை காட்டப்படல்.
  - வெளியேயுள்ள கிணற்றைச் சேறு அகற்றித் தூய்மைப்படுத்தும் அப்பாவை 'பகை வென்ற வீரனாகச் சித்திரித்தல்.
  - அவர் தன் வாழ்வின் கடைசிவரை, தன் மனக் கிணற்றுள் சேறுபோல் இருந்த பெண் குறித்த கீழான அபிப்பிராயத்தை அகற்றிவிடவில்லை என்று காட்டப்படல்.

**(08 புள்ளிகள்)**


kalvi.lk

(ii) ஒரு கதை

ஆகிய கவிதைகள் வெளிப்படுத்துமாற்றை விளக்குக.

* பெண்கள் நிலை : காலந்தோறும் பெண்கள்மீதான அடக்குமுறை நடைபெற்று வருகின்ற நிலை
* இந்நிலை மேற்படி கவிதையில் வெளிப்படுமாறு :
  - குழந்தைகள் மரக்குதிரையில் விளையாடும் ஆடுகுதிரை ஆட்டத்தை முன்வைத்து, சமுதாயத்தில் பெண்களின் நிலை பேசப்படல்.
  குழந்தை விளையாடும் மரக்குதிரை ஸ்பரிசம் அறியாதது – இதன்மூலம் பின்பு அவன் சவாரிசெய்யும் குதிரையாகக் காட்டப்படும் பெண்ணும், ஸ்பரிசம் அறியாத ஜடம் போல் நோக்கப்படுகின்ற நிலை காணப்படல்.
  குழந்தை குதிரையை அடிக்கிறான் – இவ்வாறு மனைவியைக் கணவன் அடிக்கும் நிலை உணர்த்தப்படல்.
  அவ்வாறு அடிப்பதற்காகத் தன்னையே மெச்சிக்கொள்ளும் ஆணின் திமிர்த்தனம் காட்டப்படல்.
  ஆண் தன்னைச் சவாரி செய்பவனாகவும் மனைவியைத் தன்னைச் சுமக்கும் விலங்காகவும் கருதும் நிலை கூறப்படல்.

**(07 புள்ளிகள்)**

**[ 08 + 07 = 15 புள்ளிகள்]**

**4.** 'தெளிவு' சிறுகதையில்,

(i) தபாற்காரனின் வறுமைநிலை

* கடையில் சிற்றுண்டி வாங்குவதற்கும் வசதியற்ற வறுமைநிலை
* மனைவியின் ஆசாபாசங்களை நிறைவேற்ற முடியாமை
* எல்லோரிடமும் கடன்பெற்று இனி கடன் கேட்க யாருமில்லை என்ற இயலாமை நிலை
* 'பஞ்சத்தில் அடிபட்ட போஸ்ட்பியோன்' எனத் தன்னைத்தானே நொந்துகொள்கின்றமை
* பணத்திற்கு வழியில்லாத நிலையில் தவறான வழியில் அதனைத் தேட விழைகின்றமை

**(08 புள்ளிகள்)**

(ii) தவறு செய்வது தொடர்பில் அவனது மனப்போராட்டம்

ஆகியன வெளிப்படுமாற்றினை விளக்குக.

* சரீனாவின் கடித உறையைப் பிரிக்கும் பொழுது கைவிரல்கள் நடுங்கியமை
* நோட்டையும் கடிதத்தையும் கூடவே மனச்சாட்சியையும் பெட்டியில் வைத்து இறுக மூடிவிடுவதாகக் கூறுகின்றமை
* மைமூன் கிழவியை மீண்டும் சந்தித்தபொழுது பாம்பை மிதித்துவிட்ட மனக்கலக்கத்துடன் மாபெரும் சங்கடத்திலிருந்து மீண்ட உணர்வுடன் வேகமாகச் சென்றமை
* உணர்வுகளின் ஆர்ப்பரிப்பில் ஆன்மா அமுந்தித் துடித்தமை
* குற்ற உணர்வினால் பாதிக்கப்பட்டிருந்தமை
  - வேலைக்குச் செல்ல மனமின்மை
  - பசியிருந்தும் உணவில் விருப்பமின்மை
  - தூக்கமின்மை



kalvi.lk

* உள்ளத்தில் உக்கிரமான புயல் அடித்தமை, நெஞ்சில் நெருஞ்சி முள்ளாய் நினைவுகள் எழுந்தமை

* மைமூன் கிழவியின் புலம்பல் மீண்டும் மீண்டும் காதில் வந்து மோதுகின்றமை

* உடலும் உள்ளமும் சுமையேறிக் கனத்தமை

**(07 புள்ளிகள்)**

**[ 08 + 07 = 15 புள்ளிகள்]**

5. 'புகழ் வேட்டை' எனும் கட்டுரையில்,

(i) புகழ்

* மூவேந்தர்களும் புகழுக்காகப் போர் புரிந்துள்ளமை (போரினால் பெறும் புகழ் உண்மையானதா என ஆராயாது)

* புகழ்பெறுவதற்காக பரந்த இடப்பரப்பை ஆண்டமை (வட வேங்கட தென்குமரி...)

* மூவேந்தர்களும் தம்மைப் பேரரசர்களாக / சக்கரவர்த்திகளாக கூறிக்கொண்டமை

* சோழ மன்னனின் புகழ் "முரசு முழங்கும் தானை மூவருள்ளும் அரசனெப்படுவது நினதே பெரும!" என்பதன் மூலம் புலப்படுகின்றமை

* நாடு எரியுண்பதையோ மக்கள் அழிவதையோ கருத்திற்கொள்ளாது புகழுக்காகப் போர்புரிந்தமை

**(07 புள்ளிகள்)**

(ii) போர்

என்பன மீதான பேரரசர்களின் விருப்பம், வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

* சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தரும் ஒருவர் மற்றவரை அடிமைப்படுத்துவதை வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டு போரை விரும்பியமை

* தம் இனத்தவரோடுகூடப் போரிட்டு வெற்றி பெறுவதைப் பெரு வெற்றியாக எண்ணியமை

* போரில்லாத நாட்கள் குறைவு என்று கூறும் வகையில் போர் நடைபெற்றமை

* ஒருவர்மீது மற்றவர் கொண்ட வெறுப்பும் புகழ் வேட்கையும் போருக்குக் காரணமாகியமை

* நிலைபேறில்லாத உலகில் தம் புகழை நிலைநாட்டிட, போரில் ஈடுபட்டுத் தம் உயிரை மாய்த்துக்கொண்டமை

* போரில் வெற்றி ஏற்படுத்திய வெறி தொடர்ந்தும் போர் செய்யத் தூண்டியமை

* தற்காப்புக்காக மாத்திரமன்றி வலிந்தும் போர் செய்து, அதனை அரச அறம் என்றமை

* தாம் செய்யும் போர்களை நாட்டின் நன்மைக்கானது எனக் கூறி நியாயப்படுத்தியமை

**(08 புள்ளிகள்)**

**[ 07 + 08 = 15 புள்ளிகள்]**



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page